யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

# தவணைப் பரீட்சை, யூலை - 2015
# Term Examination, July - 2015

| இந்துசமயம் | புள்ளித்திட்டம் | தரம் :- 12 (2016) |
|---|---|---|

## பகுதி - I

| | | | |
|---|---|---|---|
| 1) | – 1 | 14) | – 5 |
| 2) | – 5 | 15) | – 3 |
| 3) | – 1 | 16) | – 3 |
| 4) | – 3 | 17) | – 2 |
| 5) | – 4 | 18) | – 2 |
| 6) | – 3 | 19) | – 3 |
| 7) | – 4 | 20) | – 4 |
| 8) | – 2 | 21) | – 3 |
| 9) | – 1 | 22) | – 2 |
| 10) | – 2 | 23) | – 2 |
| 11) | – 1 | 24) | – 4 |
| 12) | – 3 | 25) | – 2 |
| 13) | – 4 | | |

(25x2= 50 புள்ளிகள்)

## பகுதி 'அ'

**1)** i) தொல்பொருட்சின்னங்கள், கல்வெட்டுகள், நாணயங்கள், இலக்கியங்கள், பிறநாட்டார் எழுதி வைத்த குறிப்புகள், அழிந்தும் அழியாத கட்டடச்சான்றுகள், ஆலயங்கள்

ii) 1.பரந்த நோக்குடையது 2. சனாதனதர்மம் என அழைக்கப்படுவது 3. உலகிலே தோன்றிய சமயங்களில் மிகப் பழமையானது 4. மனித மேம்பாட்டை மையமாகக் கொண்டது 5. வாழ்க்கை வாழ்வதற்கே என்ற அடிப்படையில் அமைந்தது 6. மானிட ஆற்றலை விட இறையாற்றலே மேலானது என்னும் கருத்துக்கள் 7. வேற்றுமையில் ஒற்றுமை காண்பது.

iii) உலகில் தோன்றிய சமயங்கள் யாவற்றிலும் காலத்தால் முந்தியது இந்து சமயமாகும். ஏனைய சமயங்கள் யாவும் மனிதர்களால் தோற்றுவிக்கப்பட இந்துசமயம் சனாதனதர்மமாக யாரால் எப்போது தோற்றுவிக்கப்பட்டது என கூறமுடியாத தொன்மைச் சிறப்பு வாய்ந்தது.
பல கோடி மக்களின் வாழ்வியல் ஒழுங்கிற்கு ஆன்மீக நாட்டத்திற்கும் வழிகாட்டியாக அமைகிறது துறவற வாழ்க்கையிலும் இல்வாழ்க்கையே மேலானது என்பதை எடுத்துக் காட்டுகிறது
கலைகளூடாக ஆன்மீகத்தை காண விளைவது (3+4+3= 10 புள்ளிகள்)

**2)** i) சுருதி, எழுதாமறை, சதுர்மறை, எழுதாக்கிளவி, அபௌர்ஷேயம், ஆம் நேயம், சுயம்பு

ii) இந்திரன் :- விண்ணிற்கும் மண்ணிற்கும் இடைப்பட்ட தெய்வங்களில் தலைசிறந்தவனாக இருக்கு வேதத்தில் காணப்படும் 250 பாசுரங்கள் இவனைப் போற்றுவதற்கே எழுந்தவை ஆகும் இடி முழக்கத்தோடு தொடர்புடையவன் இந்திரன் புறத்தோற்றம் பற்றி இருக்கு வேதம் பற்றி குறிப்பிடும் பொழுது பழுப்பு நிறத்தாடி தலைமயிர் என்று குறிப்பிடுகின்றன.

வருணன்:- இருக்கு வேதம் குறிப்பிடும் தெய்வங்களுள் தலைசிறந்த தெய்வமாக வருணன் குறிப்பிடப்படுகின்றான். ஒழுங்கு ஒழுக்கத்தின் பாதுகாவலனாக (ரிதம்) விளங்குவதால் ரிதஷயகோபா என அழைக்கப்படுகின்றான்.

அக்கினி :- வேத காலத்தில் முதன்மைத் தெய்வங்களில் அக்கினியும் ஒன்றாகும் மூஷளகிற்கும் சென்றுவரக் கூடிய தெய்வமாகவும் வழிபடுவோனையும் வழிபடப்படும் தெய்வத்தையும் இணைக்கும் தேவதூதனாகவும் தூய்மையின் சின்னமாகவும், மனைத் தெய்வமாகவும் விளங்குகின்றான்.
ஏனைய தெய்வங்களை சுருக்கமாக எழுத வேண்டும்.

iii) அக்கினியில் ஆகுதிப் பொருட்களையிட்டு பண்டமாற்று வழிபாட்டுமுறை “நான் உனக்கு பால், தயிர் முதலானவற்றைத் தருகின்றேன். நீ எனக்கு நீண்ட ஆயுள், காலம் தவறாத மழை, ஆண்சந்ததி, பசு முதலானவற்றை தரும் படி வேண்டி வழிபட்டார்கள்.

**3)** i) சித்தத்தை இறை ஞானத்தில் வைத்து வழிபாடு செய்தவர்கள் சித்தர்கள்
பிராணாயாமத்தின் மூலம் சித்தம் ஒடுக்கு வழிபாடு செய்யும் நிலையே சித்தர் வழிபாடாக அமைகிறது. ஆன்மார்த்த வழிபாட்டைச் சித்தர்கள் அறிமுகம் செய்தார்கள்.

ii) கடையிற்சுவாமி யோகர்சுவாமி, செல்லப்பா சுவாமி, நவநாத சித்தர் சித்தானைக் குட்டிச் சுவாமி

iii) 19ம் நூற்றாண்டில் ஈழத்திற்கு வருகை தந்த சித்தர்களுள் ஒருவர் கொல்லி மலை சேலம் பிரதேசத்தை வாழ்விடமாக கொண்டவர் மலை நாட்டு பிரதேசத்தை ஆன்மீக வாழ்விடமாகக் கொண்டவர். (3+3+4= 10 புள்ளிகள்)

**4)** சிவழிபாடு, சக்தி வழிபாடு, இயற்கைவழிபாடு, மர வழிபாடு, ஆற்று வழிபாடு, சூரிய வழிபாடு போன்றவை பற்றி விரிவாக விளக்கப்பட வேண்டும்.
(10 புள்ளிகள்)

**5)** பல்லவர்கால, சமய, சமூக பின்னனிஅவைதீக சமயங்களின் எழுச்சி அதற்கெதிரான போராட்டத்திற்கு நாயன்மார்கள் ஆற்றிய பங்குகள் பணிகள் பற்றிய விரிவான விளக்கங்கள் எழுதப்பட வேண்டும். (10 புள்ளிகள்)

**6)** i) இது இவ்வாறு நடந்தது
ii) சிவரகசியம் - ஒப்பிலாமணித்தேவர் இராமாயணம் - வான்மீக மகாபாரதம் - வியாசர்
iii) சைவம், வைணவ சமயங்கள் இராமாயணம் - விஷ்ணுவின் அவதாரமான இராம அவதாரம் பற்றி சொல்லப்படுகிறது. இராவணன் சிறந்த சிவபக்தன் சென்ற இடமெல்லாம் சிவலிங்கத்தை கொண்டு சென்றான் என்றும் மகாபாரதத்தில் அவதாரக்கோட்பாடு, பகவத்கீதை, தவம், யாகம், போன்றவை சிறப்பாகச் சொல்லப்படுகிறது. சமூகத்திற்கு பாத்திரங்கள் வாழ்வியலாக அறம் சொல்லப்படுகிறது.
(2+3+5= 10 புள்ளிகள்)

**7)** திருக்கேதீஸ்வரம் - ஐந்து ஈச்சரங்களில் ஒன்று கேது வழிபட்ட தலம் பாடப் பெற்ற தலமூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்பு, மகோற்சவங்கள் பற்றிய விரிவான விளக்கம் எழுதப்பட வேண்டும்.
(10 புள்ளிகள்)

**8)** 1) நாயக்கர் காலத்தில் மடங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. இஸ்லாமியர்களின் படையெடுப்பால் பாதிக்கப்பட்ட இடங்களை மீட்டு மடங்களை ஆதீனங்களை அமைத்துள்ளார். இதன் மூலம் சமயப் பணிகள் ஆற்றப்பட்டன.

இந்திரன்:- வேதகாலத் தெய்வங்களில் முதன்மைத் தெய்வமாகப் போற்றப்படுபவன். மழையைத் தரும் தெய்வம் 250 பாசுரங்களில் போற்றப்படும் தெய்வம்.
கதிர்காமம்:- ஈழத்திலுள்ள பழமையான முருகன் ஆலயங்களில் ஒன்று சிங்கள மக்களும் தமிழ் மக்களும் இணைந்து வழிபடும் தெய்வம். வாயைத் துணியினால் கட்டி கப்புறாளை என அழைக்கப்படுபவர்கள் பூஜை செய்கின்றார்கள். வேடுவ இனத்தவர்களும் வழிபாடு செய்யும் மரபுள்ள முருகன் ஆலயமாகும்.

சிவன்:- சைவசமயத்தின் முதன்மைத் தெய்வம் சிவ வழிபாடு மிகத் தொன்மையானது. தென்னாட்டு மக்களின் பிரதான தெய்வம் சிந்துவெளிப் பிரதேச மக்களால் சிவலிங்கக்கற்கள் , யோக நிலைச் சிவன், நடராஜர் வடிவம் ஆகியவை வழிபட்டமைக்கான ஆதாரங்கள் உண்டு.
(5x2= 10 புள்ளிகள்)